**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**19 ஜூன் 2015 / 02 ரமதான் 1436**

## குடும்ப மதிப்பீடுகளை ஏற்படுத்தும் ரமதான் மாதம்

اَلْحَمْدُ للهِ الَّذِي جَعَلَ رَمَضَانَ شَهْرًا مُبَارَكًا. وَفَرَضَ فِيْهِ الصِّيَامَ
وَأَعَدَّ فِيْهِ فَضْلاً كَبِيْرًا وَأَجْرًا عَظِيْمًا. وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ. اَللَّهُمَّ
صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ.
أَمَّا بَعْدُ، فَيَا أَيُّهَا الْمُؤْمِنُوْنَ، اتَّقُوْا اللهَ ، أُوْصِيْكُمْ وَإِيَّايَ بِتَقْوَى
اللهِ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள, அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்ஹம்துலில்லாஹ் (எல்லாப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!). அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்போம்; அல்லாஹ் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வோம் எனும் நமது தீர்மானத்தைப் புதுப்பித்துக் கொள்வோமாக! அவ்வாறு செய்வதன் மூலம், புனிதமிக்க இம்மாதத்தின் இறுதியில் நாம் உண்மையான தக்வா (பயபக்தியை) அடைந்து கொள்வோம். இன்ஷாஅல்லாஹ்.

ஜமாஅத்தார்களே!

ரமதான், நற்காரியங்கள் செய்யப்படுவதற்கு மிகவும் பொருத்தமான, சிறந்த மாதம் என்பது அனைவரும் அறிந்த விஷயமாகும். இம்மாதத்தில், நாம் புரியக்கூடிய கிருபையானச் செயல்களுக்கு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் பன்மடங்கு வெகுமதிகளை நாம் வழங்கப்படுவோம்.

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) நவின்றுள்ளார்கள்:
"ரமதான் மாதம் வந்ததும் சொர்க்கத்தின் அனைத்து வாசல்களும் திறக்கப்படுகின்றன. நரகத்தின் அனைத்து வாசல்களும் மூடப்படுகின்றன. ஷைத்தான்கள் சங்கிலிகளால் கட்டப்படுகின்றன". (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

மேற்கண்ட ஹதீதில் காணப்படும் "சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன" எனும் வாசகத்துக்கு, இமாம் "அல்-காழி பின் இயாழ்" (ரஹ்) அவர்கள்: "அதிக நற்காரியங்களைச் செய்வதற்கான வாய்ப்புகளும், மற்ற மாதங்களை விட இம்மாதத்தில் உச்சகட்டமான அர்ப்பணிப்புகளைச் செய்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன" என விளக்கமளித்துள்ளார்கள். எனவே, அருள்மிக்க இம்மாதத்தில் வழங்கப்படும் சிறப்பான பரிசுகளையும், வெகுமதிகளையும் அறுவடை செய்வதற்கான அரிய வாய்ப்பை நமது குடும்பத்தார்கள் தவற விடாமலிருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். இம்மாதத்தில் நரகத்திலிருந்து விடுதலை கிடைக்க வேண்டும் என விரும்புகின்ற, அதற்காக முயற்சிக்கின்ற நாம், வணக்க வழிபாடுகளையும், கிருபையானச் செயல்களையும் நமது குடும்பத்தாருடன் இணைந்து புரியலாமல்லவா? அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அத்-தஹ்ரீம்" எனும் அத்தியாயத்தின் 6-வது

வசனத்தில் கூறும் பின்வரும் கருத்துக்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا قُوا أَنفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا وَقُودُهَا النَّاسُ وَالْحِجَارَةُ عَلَيْهَا مَلَائِكَةٌ غِلَاظٌ شِدَادٌ لَا يَعْصُونَ اللَّهَ مَا أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ

பொருள்: நம்பிக்கையாளர்களே! நீங்கள் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதனுடைய எரிகட்டை மனிதர்களும் கற்களுமாகும். அதில் கடின சித்தமுடைய பலசாலிகளான மலக்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு ஏவியதில் ஒரு சிறிதும் அவர்கள் மாறு செய்யமாட்டார்கள். அவர்கள் தங்களுக்கிடப்பட்ட கட்டளைகளையே செய்து வருவார்கள்.

எனவே, இம்மாதத்தில் நமது குடும்பத்தார்களிடம் சிறந்த மதிப்பீடுகளை ஏற்படுத்துவதற்கு கடின முயற்சி செய்வோமாக! உதாரணமாக, நோன்பு நோற்கும் போதும், நோன்பு திறக்கின்ற நேரத்திலும் அதிகமாக துஆச் செய்யுமாறு (அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரியுமாறு) அவர்களுக்கு நாம் போதிக்க வேண்டும். காரணம், ”நோன்பாளி நோன்பு திறக்கின்ற போது கேட்டும் துஆ நிராகரிக்கப்படமாட்டாது” என ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ளார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் இப்னுமாஜா ரஹ்).

மேற்கண்ட ஹதீதை அறிவிக்கின்ற அப்துல்லாஹிப்னு அம்ருப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள், நோன்பு திறக்கின்ற நேரத்தில், தனது மனைவி மற்றும் மக்களிடம் துஆச் செய்யுமாறு அடிக்கடி கேட்டுக் கொள்வார்கள் என இமாம் ”அத்தொயாலிசி” (ரஹ்) அவர்கள் விளக்கமளித்துள்ளார்கள். தராவீஹ் தொழுகைகளைத் தொழுது, திருக்குர்ஆன் ஓதப்படுவதைக் கேட்டு, அல்லாஹ்வின் வெகுமதிகளைச் சம்பாதிக்க வேண்டும் என விரைந்து செல்கின்ற நாம், இவ்விஷயத்தில் நமது மனைவி, மக்களையும் மறந்து விடக்கூடாது. நமது குடும்பத்தாருடன் இணைந்து அல்லாஹ்வுடனான நமது உறவைப் பலப்படுத்திக் கொள்வோமாக! அவ்வாறு செய்தால், அல்லாஹ் நமது குடும்ப உறவுகளைப் பலப்படுத்துவான். நமது குடும்பத்தில் அமைதியை ஏற்படுத்துவான்.

இந்த ரமதான் மாதத்திலிருந்து, நமது குடும்பத்தாருடன் அதிக நேரங்களைக் கழிப்பதற்கு கடின முயற்சி செய்வோமாக! நோன்பு திறக்கும் நேரங்களில் பிரார்த்தனை செய்வது, திருக்குர்ஆன் ஓதுதல், தராவீஹ் தொழுகை தொழுதல் போன்ற நற்காரியங்கள் - அவற்றைக் குடும்பத்தாருடன் புரிய வேண்டும் எனும் ஆர்வத்தை நம்மில் ஏற்படுத்தட்டுமாக! நமது வீடுகள் கிருபையானச் செயல்கள் மற்றும் வணக்க வழிபாடுகளால் நிரப்பப்படும் போது, மேலும் அவை உளத்தூய்மையுடன் நிறைவேற்றப்படும் போது, இன்ஷாஅல்லாஹ், நமது வீட்டில் வசிப்பவர்களின் உள்ளங்கள் அமைதியை உணரும். அல்லாஹ்வின் ”ரஹ்மத்” எனும் சாந்தத்தையும் தெளிவையும் நாம் அடைவோம்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே! மற்றவர்களுடனான நமது உறவையும் பலப்படுத்திக் கொள்வதற்கு இந்த ரமதானை ஓர் அரிய வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வோமாக! உதாரணமாக, சிங்கப்பூரில் காணப்படும் பள்ளிவாசல்கள் மற்றும் இஸ்லாமிய நிறுவனங்கள், இப்புனிதமிக்க மாதம் முழுவதிலும் ஒட்டுமொத்த சிங்கப்பூர் சமுதாய மக்களுக்குப் பங்களிப்புகளைச் செய்வதற்காக பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ய உள்ளன.

நமது குடும்பத்தார்கள், தமது நேரத்தையும் சக்தியையும் அந்நற்காரியங்களுக்குத் தொண்டூழியம் செய்வதை நாம் உறுதி செய்வோமாக! அல்லாஹ்வின் அருளையும், கிருபையையும் எதிர்பார்க்கின்ற நாம், முதலில் மற்றவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வது அவசியமாகும். மதம், இனம் எனும் பாகுபாடுகள் இன்றி அனைவருக்கும் நமது குடும்பத்தார்கள் கிருபை காட்டி, அன்பு கொள்ள முயற்சிக்கும் போது, அல்லாஹ் தனது அன்பையும் ”ரஹ்மத்” (அருளையும்) நமக்கு வழங்குவான். ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

”எவர், ஒரு இறைநம்பிக்கையாளரின் உலகியல் கஷ்டங்களில் ஏதாவதொன்றை எளிதாக்குகின்றாரோ, அவ்வாறு எளிதாக்கியவரின் மறுமைக் கஷ்டங்களில் ஒன்றை அல்லாஹ் எளிதாக்குவான். பொருளாதாரச் சிக்கலில் மாட்டிக் கொண்ட ஒருவரது பிரச்சனையை எவராவது எளிதாக்கினால், அவ்வாறு எளிதாக்கியவரின் இம்மை, மறுமைப் பிரச்சனையை அல்லாஹ் அஜ்ஜ வஜல் எளிதாக்குவான். எவர் ஒருவர், ஒரு முஸ்லிமின் மானத்தை மறைக்கின்றாரோ இம்மையிலும்

மறுமையிலும் அவரது மானத்தை அல்லாஹ் மறைப்பான். ஒரு அடியார், தனது சகோதரனுக்கு உதவும் காலமெல்லாம் அல்லாஹ் அவருக்கு உதவிக் கொண்டிருப்பான். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

மேற்கண்ட ஹதீதின் அடிப்படையில், மற்றவர்களின் நலனிலும் அவர்களின் தேவைகளிலும் அக்கறை செலுத்துகின்ற சிங்கப்பூரர்களாக ஆகுவதற்கு நாம் கடின முயற்சி செய்வோமாக! உதாரணமாக, நாம் தராவீஹ் தொழுகைகளை நிறைவேற்றுவதற்காக பள்ளிவாசல்களுக்கு வாகனங்களில் செல்லும் போது, தயவுசெய்து போக்குவரத்துக்கு நெருக்கடி ஏற்படும் வகையில் வாகனங்களை ஆங்காங்கே நிறுத்த வேண்டாம். முஸ்லிம்கள் எனும் ரீதியில், முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாது, அனைவருக்கும் நலனை நாடும் பொறுப்புணர்வுமிக்க மக்களாக நாம் ஆக வேண்டும் என நமது குடும்பத்தார்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டும். இஸ்லாமிய அமைப்புகள் அல்லாத மற்ற அமைப்புகளுக்கு உதவும் வாய்ப்புகள் கிடைத்தாலும்- அவை சமூக சேவை செய்யும் நிறுவனங்களாக இருந்தாலும் சரி- அவற்றுக்கும் உதவி, அனைவருக்கும் அருள்களை ஏற்படுத்துபவர்களாக நாம் ஆக வேண்டும். அவ்வாறு செய்யும் போது நமது மார்க்கத்தின் தோற்றத்தை மேன்மையுறச் செய்தவர்களாக நாம் ஆகுவோம்.

இந்த ரமதான் மாதத்தில், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்குக் கடின முயற்சி செய்தவர்களில் நின்றும் நாம் ஆகுவோமாக! அல்லாஹ் நமது உள்ளங்களைப் பரிசுத்தமாக்குவானாக! நற்காரியங்களைச் செய்வதில் நமது குடும்பத்தார்களிடம் உளத்தூய்மையை ஏற்படுத்துவானாக! இந்த

ரமதான், நமது குடும்பத்தார்களுக்கும் நாட்டுக்கும் நமக்கும் நன்மைகளை ஏற்படுத்தட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيمِ ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ ، أَقُولُ قَوْلِي هذَا وَأَسْتَغْفِرُ اللَّهَ الْعَظِيمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ ، وَالْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِينَ وَيَا نَجَاةَ التَّائِبِينَ.